Registered No. M. 2830 "SIDDHANTHAM"
Vol. 42 — No. 9

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | சௌமிய புரட்டாசி 1969 செப்டம்பர் | இதழ் 9

உள்ளுறை

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்.
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குமாரகுருநாத முதலி தெரு சமாச அலுவலகத்தில் 28-9-'69 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, மாதக் கூட்டம், ஆண்டுவிழா முதலியன பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகின்றனர்.

நம் சமாஜ ஆயுள் உறுப்பினராக திரு. பழ. முருகேசன் அவர்கள் (ஆசிரியர், 25, தாகூர் தெரு, புன்செய்ப் புளியம்பட்டி அஞ்சல், கோவை மாவட்டம்) சேர்ந்துள்ளாகள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புரட்டாசித் திங்கள் சிறப்பு நாள்கள்.

5 (21—9—69) உத்திராடம்—ஏனாதிநாத நாயனார் விழா

8 (24—9—69) சதயம்—நரசிங்கமுனையரைய நாயனார் விழா

12 (28—9—69) அசுபதி—உருத்திரபசுபதி நாயனார் விழா

15 (1—10—69) உரோகணி—திருநாளைப்போவார் நாயனார் விழா

22 (8—10—69) பூரம்—அருணந்தி சிவாசாரியார் விழா

பிறசெய்திகள்

கோவை மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டி அருள்நெறி மன்றத்தின் சார்பில் 6-8-69 புதன் இரவு மதுரை ஆதீனச் சமயப் பரப்புநர் சிவத்திரு கே. வேங்கட சுப்பிரமணியம் அவர்கள் 'கண்ணப்ப நாயனார்' எனும் பொருள் பற்றி இசைச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியுடன் நாடு.

மலர் 42	சௌமிய ஹூ புரட்டாசி 1969 செப்டம்பர்	இதழ் 9

தேவாரம் பெற்ற தலத்தொகை

ஆசிரியர்

அப்பர் சம்பந்தர் சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரம் பெற்ற தலங்கள் 274 என்பது பண்டைக்காலத் திலேயே வரையறை செய்யப் பெற்றுள்ளது. உமாபதி சிவா சாரியார் பாடினுர் என்று வழங்கும் சிவதல சிவ சத்தி நாமக்கலி வெண்பா என்ற பழைமையான நூல் 300 கண்ணி களை யுடையது. இது இத் தலங்களை வரிசைப் படுத்திக் கூறுகிறது. தோடக்கம், கோயிலாகிய தில்லை முதல்; இறுதி கைலாயம். சோழ நாட்டில் தலங்கள் மிகவும் அதிகமான படியால், தில்லை தொடங்கிக் காவேரி வட கரை, தென்கரை எனப் பாகுபாடு செய்யப்பட்டன. ஏனைய பகுதிகள் யாவும் நாட்டை ஒட்டியே பாகுபாடு செய்யப் பெற்றிருக்கும் நாடு களாவன! சோழநாடு, ஈழநாடு, பாண்டிநாடு, மலைநாடு, கொங்குநாடு, நடுநாடு, தொண்டைநாடு, துளுநாடு, வடநாடு. இவற்றுக்குரிய தல எண்களையும் பின்னே காண்போம்.

இனி கிடைக்கிற தேவார ஏடுகள் யாவும், பாடல்கள் திருமுறைக் கிரமமாக, 1, 2, 3, 4, 5, 6, 7 என்று எழுதப் பட்டிருக்கும். இது பண்முறையாக இருப்பதால் தேவாரப் பண்முறை ஏடு என்றே சொல்வார்கள். சிலசமயம், தல தரிசனத்தின் போது பாராயணம் செய்ய வசதியாய் இருக்கும் பொருட்டு, ஒரு தலத்திற்குரிய எல்லாப் பதிகங்களும் ஒருங்கு தொகுத்து எழுதப் பெற்ற ஏடுகளும் அபூர்வமாய் இருந்திருக்

கின்றன. இவை தலமுறை ஏடுகள் எனப்படும், (எம்மிட முள்ள அடங்கன் முறை ஏடுகள் ஐந்தில், நான்கு பண்முறை; ஒன்று மட்டும் தலமுறை)

இத்தலங்கள் 274க்கும் நாடு அடைவு சொன்ன பழம் பாடல்கள் பலவாகும். ஒன்று திரிகூடராசப்பன் கவிராயர் பாடிய திருக் குற்ருலப் புராணம்-தேவர்கள் சிவத்துரோக மடைந்த சருக்கம் 53-ஆம் பாடல்;

துங்கவட கயிலாய முதலா வைந்து
துளுவொன்று தொண்டைவள நாட்டெண் ணுன்கு
தங்குநடு நாட்டிருபத் திரண்டு பொன்னித்
தலம்நூற்றுத் தொண்ணூறு மலைநாட் டொன்று
கொங்கேழு சிங்களத்தி லிரண்டு வைகை
கொழிதமிழ்நாட் டீரேழு முதலாஞ் சூலச்
செங்கையார் தலமிருநூற் றெழுபா ஞன்கில்
தெக்கிணபாற் கயிலாயந் திருக்குற்ருலம்.

மற்ருென்று, திருச்சிற்றம்பல நாவலர் செய்த அண்ணுமலைச் சதகம் 6-ஆம் பாடல்:

காவிரியின் வடகரையி லறுபத்து மூன்றுபதி
காண்டரும் தென்கரையினிற்
கருதுமொரு நூறுமிரு பத்தே ழெனும்பதி
கணிக்கிலீ ழத்திரண்டு
கோவியற் பாண்டிபதி ஞன்குமலை நாடொன்று
கொங்கிலேழ் நடுநாட்டினிற்
கூறுமிரு பத்திரண் டாங்தொண்டை நாட்டிற்
குறிக்கிலெண் ணுன்கு தலமாம்
பூவிரவு துளுவத்தி லொன்றுவட திசையைந்து
புகலிலிரு நூறுமெழுபான்
புணருமோர் நாலுதல மூவர்பா டியதலம்
புண்ணியத் தலமென்பர்காண்,

பின்னும் பல பாடல்கள் இந்த அடைவே கூறிவரக்காணலாம். கல்வெட்டின் மூலம் புதிதாய்த் தெரியவந்தது திருவிடைவாய் என்ற தலத் தேவாரம். இத்தலம் முந்தியவற்றினும் அதிக மானது; ஆகவே மொத்தத்தலம் 275.

1905-இல் செந்தமிழ் 4-ஆம் தொகுதியில் (பக்கம் 182) வெளியிடப் பட்டுள்ள ஒருபாடல், இப்பாடல் பெற்றதலங்

களின் தொகை 279 என்று குறிப்பிடுகிறது. பாடல் பின் வருவது:

சோணாட்டு ஒருநூற்றுத் தொண்ணூற்று நாலு
துளுவிலொன்றும்
ஈணாட்டிரண்டு மலைநாட்டிலொன்று கொங்கு
ஏழுவையை
வாணாட்டிலீரேழ் மகதத்தை யைந்து
வடக்கிலைந்து
நாணாட்டிய தொண்டை நன்னாட்டிலாறைந்து
நன்னகரே.

(இப்பாடல் நடுநாட்டை மகதநாடு என்று கூறுகிறது.)

இனி, பழமையாக வழங்கும் தொகையையும் இப்பாடல் காட்டும் தலத்தொகையையும் பின்வருமாறு நாடுகளுக்கு அடைவு செய்து காட்டலாம்.

நாடு	தலங்கள் பழமையான தொகை.	தலங்கள் இப்பாடலில் கண்டது.
சோழநாடு		
காவிரி வடகரை	63	194
காவிரி தென்கரை	127	
ஈழநாடு	2	2
பாண்டிநாடு	14	14
மலைநாடு	1	1
கொங்குநாடு	7	7
நடுநாடு	22	25
தொண்டைநாடு	32	30
துளுநாடு	1	1
வடநாடு	5	5
	274	279
(விடைவாய்) தனி	1	

இவ் வேறுபாட்டுக்கு விளக்கம் தெரியவில்லை. தெரிந்து யாரேனும் கூறமுடியுமாயின் பயனுடையதாயிருக்கும்.

திருமருகல் தல வரலாறு

எஸ். சங்கரநாராயணன், திருமருகல்.

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுள் மெலிவே

—திருஞானசம்பந்தர்

பெருக லாந்தவம் பேதைமை திரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

—திருநாவுக்கரசர்

திருஞானசம்பந்தர் வரலாற்றுச் சம்பந்த முடைய திருத்தலங்களில் ஒன்று திருமருகல். இது சோழநாட்டில் பாடல் பெற்ற பதியுமாகும். தஞ்சைமாவட்டம் நன்னிலம் வட்டத்திலிருக்கிறது. மாயூரம் — அறந்தாங்கி இருப்புப்பாதையில் நன்னிலம் புகைவண்டி நிலையத்துக்குக் கிழக்கே ஏழுகல் தொலைவிலிருக்கிறது. நன்னிலத்திலிருந்து நாகப்பட்டினம் செல்லும் பஸ்கள் இவ்வூர்ப் பக்கமாகச் செல்கின்றன.

நீர்வளம், நிலவளம் மிக்க அழகிய சிற்றூர் திருமருகல். கோயில் நடு நாயகமாய் விளங்குகிறது. கோபுரமும் அதன் முன் இருக்கும் திருக்குளமும் அழகிய தோற்ற முடையவை. திருக்குளத்தின் கரைமேல் முத்துவிநாயகர் கோயில் இருக்கிறது. கோயிலின் கிழக்கு வாயிலில் 68–அடி உயர முள்ள ஐந்து நிலைக்கோபுரமும், தெற்கு வாயிலில் அம்மன் சந்நிதிக்கு நேரே மூன்றுமாடக் கோபுரமும் இருக்கின்றன கோயில் செயற்கை மலைபோல் கட்டப் பெற்றது. சிலந்திச் சோழனெனப்படும் கோச்செங்கட்சோழன் அமைத்த எழுபதுமாடக் கோயில்களில் இதுவும் ஒன்று. கட்டுமலைமேல் ஒரு பிரகாரமும், கீழே ஒரு பிரகாரமும் இருக்கின்றன. தெற்கு வெளிப்பிரகாரத்தில் சாஸ்தா, சப்தமாதர் இவர்களின் சந்நிதி இருக்கிறது. தென்மேற்கு மூலையில் சுரந்தீர்த்த விநாயகர் சந்நிதி உள்ளது. சோழமன்னன் ஒருவன் வெப்பு நோயால் துன்புற்று இந்த விநாயகரை வழிபட்டு நோய் நீங்கப்பெற்றான் என்பது கர்ணபரம்பரைச் செய்தி, இப்போதும் சுரநோய்

கண்டவர்கள் இவரை வேண்டிக்கொண்டு நோய் நீங்கப் பெறுகின்றனர். வடக்குப்பிரகாரத்தில் சந்தான விநாயகர் சந்நிதி இருக்கிறது. அதற்கு எதிரில் மேற்கு நோக்கி ஒரு சிவலிங்க மூர்த்தி காணப்படுகிறார். இவரைப் பிராவிடையார், பிரியா விடையார் என்பதன் மரூஉ மொழி போலும் (துணையாசிரியர்) மருகலுடையார் என்றழைக்கின்றனர். இவர் கோயில் மிகப் பழைமையானது என்று சொல்லப் படுகிறது. இதற்கருகில் தெற்கு பார்க்க, சௌந்தரநாயகியம்மன் சந்நிதி இருக்கிறது.

தெற்கு உட்பிரகாரத்தில் நால்வர், மற்றநாயன்மார் சந்நிதிகளும், தென்முகக் கடவுளும், மேற்குப் பிரகாரத்தில் பிரதான விநாயகர், முருகன், கஜலெட்சுமி சந்நிதிகளும், வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர், துர்க்கை, உற்சவ சுப்பிரமணியர், செட்டிப்பெண், செட்டிப்பிள்ளை, நடராசா முதலியவர்களுடைய சந்நிதிகளும் உள்ளன. வடகிழக்கு மூலையில் நவக்கிரகங்கள் இருக்கின்றன. கட்டுமலைமேல் மூலஸ்தான சுயம்பு மூர்த்தியான இரத்தினகிரீசுவரர் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இவருக்கு மாணிக்கவண்ணர் என்ற அழகிய திருநாமமும் உண்டு. இந்தசந்திக்குத் தென் புறம் சோமாஸ்கந்தர் சந்நிதி இருக்கிறது. வெளிப்பிரகாரத் தின் வடகிழக்கே அம்பிகையின் தெற்கு நோக்கிய சந்நிதி இருக்கிறது தேவியின் திருப்பெயர் வண்டுவார் குழலி என்பது; ஆமோதளநாயகி என்றும் கூறுவர்.

இத்தலத்திற்கு மூன்று தீர்த்தங்கள் முக்கியமானவை, இலக்குமிதீர்த்தம் என்பது கோயிலுக்குமுன் இருக்கும் திருக்குளம்; இந்தத்தீர்த்தத்தில் வரலெட்சுமி நோன்பு நாளிலும், மறு நாளிலும் நீராடி மாணிக்கவண்ணரை வழி படுவோர் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வடைவர் என்பது மக்கள் நம்பிக்கை. இப்போதும் மக்கள் பலர் வந்து அந்தநாட்களில் நீராடி இறைவனை வழிபடுகின்றனர். தெற்கு வீதியில் ஆலய ஆலுவலகத்தின் பின்புறம் சீராளன் குளம் இருக்கிறது. இக் குளத்திலும் சித்திரை, ஐப்பசி அமாவாசை நாள்களிலும் நீராடி மாணிக்க வண்ணரையும் வண்டுவார் குழலியையும் வழிபடுவோர் புத்திரப்பேறு அடைவர் என்று சொல்லப் படுகிறது. இப்போது ஆலய அலுவலகமாக இருப்பது மடமாக இருந்த தென்றும், இவ்விடமே சிறுத்தொண்டர் மகனாகிய சீராளன் கல்வி பயின்ற சாலையாக இருந்ததென்றும் சொல்லப் படுகிறது. வடக்கு உட்பிரகாரத்தில் சாட்சிக் கிணறு என்ற தீர்த்தமும் இருக்கிறது. இதன் வரலாறு பின்னர்

சொல்லப் படுகிறது. இத்தல விருட்சம் வாழை. இதுவும் வடக்கு உட்பிரகாரத்தில் மதில் ஓரமாக இருக்கிறது. இக் காரணத்தால் இத்தலத்திற்குக் கதலிவனம் என்ற பெயரும் உண்டு. கோயிலில் ஐந்து கால பூசை நடைபெறுகிறது. சித்திரையில் பிரமோற்சவம் நிகழ்கிறது. இவ்வூரில் இன்னும் சில கோயில்கள் இருக்கின்றன. தெற்கு வீதியில் தெற்குக் கோபுர வாயிலுக்கெதிரில் விடந்தீர்த்த விநாயகர் கோயிலும், மேற்கு வீதியின் மேல்புறம் வரதராஜப் பெருமாள் கோயிலும், வடக்கு வீதியில் முருகன் கோயிலும் இருக்கின்றன, மேலும் பூஞ்சேமுடையார், தருமர், பிடாரி, ஐயனர் முதலியவர்கள் கோயில்களும் உள்ளன.

திருஞான சம்பந்தர் இத்தலத்து இறைவன்மீது 'சடையாய் எனுமால்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடியருளியிருக்கின்றனர். திருமருகலுடன திருச்செங்காட்டங்குடியையும் சேர்த்து வினவுரையாக "அங்கமும் வேதமும்" என்று தொடங்கும் திருப்பதிகம் ஒன்றையும் ஓதியருளியுள்ளார். இதில் 'மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல்,' 'மாடம் நெடுங்கொடி விண்தடவும் மருகல்,' 'மாமருவும் மணிக்கோயில் மருகல்,' என்றெல்லாம் போற்றிப் புகழ்கிருர். அவரே, க்ஷேத்திரக் கோவைத் திருப்பாடலில் 'தெற்குன்றம் ஓத்தூர் நிறைநீர்மருகல் நெடுவாயில்' என்று கூறியிருக்கிருர். 'நிறைநீர்' என்று சிறப்புக்கொடுத்துப் பாடியிருப்பதை இன்றும் நீர்வளத்துடன் இவ்வூர் இருப்பதால் அறியலாம்.

திருநாவுக்கரசர் ஒருபதிகம் இத்தலத்தைப் பற்றிப் பாடியருளியிருக்கிருர். அதில் ஐந்து பாடல்கள் அகச்சுவை பட அமைந்திருக்கின்றன. தலைவி ஒருத்தி கிளிக்குப் பாலூட்டி வளர்த்து, சொற்கள் கற்பித்து, மருகற் பெருமானுக்குத்தூது அனுப்புவதாகக் கூறியிருப்பது படித்து மகிழற்பாலது. பொதுத் திருத்தாண்டகம் ஒன்றில் "மருகலுறை மாணிக்கத்தை" என்று இறைவன் பெயரைக் குறிக்கிருர். க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் "மருகல் வன்னி நிலமலி நெய்த்தானத்தோடு எத்தானத்தும் நிலவுபெரும் கோயில் பல கண்டால் கயிலாயநாதனைக் காணலாம்" என்றும் கூறியிருக்கிருர். சுந்தரர் இத்தலத்திற்குத் தனிப் பதிகம் பாடவில்லையானுலும் "வாழைகாய்க்கும் வளர் மருகல் நாட்டு மருகலே" என்று குறிப்பிட்டிருக்கிருர். இதிலிருந்து 'வாழை' தல விருட்சம் என்பதும், இவ்வூர் உள்நாட்டுப் பிரிவிற்குத் தலை நகராக இருந்ததென்பதும அறியக்கிடக்கின்றது.

சேக்கிழார் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் இத் தலத்திற்கு எழுந்தருளியதைக் கூறும்பகுதி அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியது. வைப்பூரில் தாமன் என்ற வணிகன் இருந்தான். அவனுக்கு ஏழுபெண்கள். அவன் தன் சகோதரிமகனுக்குப் பெண் கொடுப்பதாகச் சொன்ன சொல் தவறி, பொருள் ஆசையால் முதல் ஆறு பெண்களையும் அயலாருக்கு மணம் முடித்துக் கொடுத்து விட்டான். ஏழாவது பெண் தன் அத்தைமகனின் நிலைக்கிரங்கி, அவனுடன் புறப்பட்டுத் திருமருகலுக்கு வந்து மாணிக்க வண்ணரை வழிபட்டு இரவில் ஒரு மடத்தில் தங்கியிருந்தனள். இரவில் அவ்வணிகனைப் பாம்பு கடிக்க, அவன் இறந்தான். 'விதியினை யாவரே வெல்லு நீர்மையார்?' திக்கற்ற அந்த வணிகப்பெண் நெடுங்குரலெடுத்து அழுதுகொண்டிருந்தாள். அத்தலத்திற்கு வந்து அடியார்களுடன் தங்கியிருந்த சம்பந்தர் காதில் அக்குரல் விழுந்தது. சம்பந்தர் எழுந்தருளிப் பெண்ணை விவரம் கேட்டார். அவளும் தன் கதையைச் சொன்னாள். இதைச்சேக்கிழார் வாக்கால் அறிய வேண்டும்.

வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் தாமன் எந்தை
　　மருமகன்மற் றிவனவற்கு மகளிர் நல்ல
இளம்பிடியார் ஒரேழுவர் இவரில் மூத்தாள்
　　இவனுக்கென் றுரைசெய்தே ஏதி லானுக்
குளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த பின்னும்
　　ஒரொருவ ராகஎனை யொழிய ஈந்தான்
தளர்ந்தழியும் இவனுக்காத் தகவு செய்தங்
　　கவரைமறைத் திவன்தனையே சார்ந்து போந்தேன்

என்ற பாடலில் சுருங்கச் சொல்லி விளங்கவைத்திருக்கும் பெற்றிமை மகிழ்தற்குரியது காழி வேந்தரும் மாணிக்க வண்ணரை நோக்கிச் 'சடையாய் எனுமால்' என்னும் பதிகத்தை விண்ணப்பித்தார். பதிகம்பாடி முடிந்தபின் உறங்கி விழித்தவன்போல் எழுந்தான் வணிகன். ஆளுடைய பிள்ளையாரும், மாணிக்கவண்ணர், கிணறு, வன்னிமரம் இவைகள் சான்றாக வணிகனுக்கும் கன்னிகைக்கும் திருமணம் செய்துவைத்தனர். கோயில் சந்நிதியில் வன்னி மரமும், திருமண மேடையும் இன்னும் காட்சிதருகின்றன. சித்திரை பிரமோற்சவத்தில் ஆறுந்திருநாளன்று விடந்தீர்த்த புராண ஐதீகமும், ஏழாந்திருநாளன்று செட்டிப்பிள்ளைக்கும், செட்டிப் பெண்ணுக்கும் கலியாணமும் நடைபெறுகின்றன,

அருணகிரிநாதர் பாடிய பழனித் திருப்புகழ் ஒன்றில் "தமிழ்க்காழி மருதவனம் மறைக்காடு திருமருகல் தனுக்கோடி வருகுழகர் தருவாழ்வே" என்பதில் இத் தலத்தைக் குறித்திருக்கிருர். கீழக்கோபுர உள்சுவரில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. இதில் சகாப்தம் 1617-ல் தஞ்சையையாண்ட மன்னர் காலத்தில் சுபேதார் தீராதவினை தீர்த்த முதலியார் அகோர சிவபண்டாரம் மூலமாக மாணிக்க வண்ண சுவாமிக்குக் கட்டளைக்காக 400 பொன் வழங்கியதைக் குறிக்கிறது. திருப்புகலூர்க் கோயிலில் உள்ள குலோத்துங்கன் கல்வெட்டொன்றில் சீராளன் பள்ளிக்குச் செல்ல தெரு ஒதுக்க நிலம் அளந்து விட்டதாகத் தெரியவருகிறது.

பால் முழவும் விழவும் ஓவாப்
    பன்மறை யோரவர் தாம்பரவ
மாடம் நெடுங்கொடி விண்தடவும் மருகல்
    நிலாவிய மைந்த சொல்லாய்
சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த சீர்கொள்
    செங்காட்டங் குடிய தனுள்
காடக மேஇட மாக ஆடுங்
    கணபதி ஈச்சரங் காமுறவே

—திருஞானசம்பந்தர்

அகத்தில் அப்பர்

பசு- பால. நடராசன், பி. ஏ.

" மருக்கு லாவு மறைவனத் தோன்றிய
திருக்க பாடந் திறந்தசொல் வேந்தனை
அருட்கு லாவும் அறிவினை மூடிய
இருட்க பாடந் திறக்கவும் ஏத்துவாம் "

(சிவப்பிரகாசசுவாமிகள்)

பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறும் நம் சமயம்! இறைவனைப் போற்றுதலே பேறு; அவனை நினைப்பதே நியமம் என்று சிந்தித்தனர் நம் முன்னோர். அவனைக் காண்பதற்கு அவனருளேயே

கண்ணாகக் கொண்டனர் நம் சமயாசாரிய மூர்த்திகளாதியர். நடையறாப் பெருந்துறவியின் தொடையறாச் செவ்வாயில் தோன்றிய ஞானவாரியாம் பாக்களில் எங்கும் முத்துக்கள் நிரம்பி யிருக்கின்றன. எங்கெங்கே மூழ்கினாலும் அங்கங்கே ஒண்ணித்திலங்கள் கிடைக்கும். அத்தகைய அரும்பாக்களில் அகத்துறைக் கருத்துக்கள் அரும்பி அணிசெய்வனவும் பலவாம்! சிவத்தைத் தலைவனாகவும் உயிரைத் தலைவியாகவும் பாவித்து உறவுகொள்ளுகிற நெறி இதுவேயாம். திருநாவுக்கரசு சுவாமிகள் தம்மைத் தலைவியாகவும் சிவபிரானைத் தலைவனாகவும் பாவித்துப் பரவுகின்றார். அவ்வொழுகலாறும் சிந்தனைக்கு விருந்தாக அமைகிறது.

இறைவனை இயன்றவாறெல்லாம் இசைகூறி ஏத்துவது அடியார்தம் செயலன்றோ? இறைவனை பிக்ஷாடனன்—உலந்தார் தலையில் பலி கொண்டுழல்வான்—என்றுபோற்றுவது ஒருமாபு.

“ஓடே கலன்; உண்பதும் ஊரிடுபிச்சை;
காடே இடமாவது; கல்லால் நிழற்கீழ்
வாடா முலைமங்கையுந் தானும் மகிழ்ந்து
ஈடா உறைகிற இடைமரு தீதோ?”

என்று காழிக் கவுணியர் கற்பிப்பர். மற்றொரு மாபு எல்லாச் செல்வமும் நிறைந்த கோடீச்சுரனாகக் கூறிப் போற்றும். கொட்டையூர் கோடீச்சரனை (சிவனை)ச் சிவக்கொழுந்து தேசிகர் அவர்கள் பிரியாது வணங்கி வாழ்ந்தவர் ஆவார்கள். அவர்கள் தம் பக்திக்குரிய கோடீச்சுரன் மீது “கோடீச்சுரக் கோவை” என்ற அற்புதமான அருந் தமிழ் பாடிப் போற்றினார்கள். செல்வமே இல்லாச்சிவனைக் கோடீச்சுரன் என்று மெய்போலும் பொய் புகன்றார் என்று அவரைப் பற்றி மற்றொரு புலவர் பாடிச் சிறப்புச் செய்தார். இவ்வாறாக சிவனைச் சிந்தித்துப் பந்தமறுத்தோரும் பவத்தொடக்கை வென்றோரும் பலர் ஆவர்.

சைவப் பெருநெறிக்கே அணியாய அப்பர் பிரான்தன் அருந்தமிழ்ப் பாக்களில் அகத்துறையில் அமைந்தபாக்கள் அருமை பெருமையுடையன. காழிக் கவுணியர் தம்மைத் தலைவியாகப் பாவித்துப் பாடுவதாக நாம் முதற் பதிகத்திலேயே காண்கிறோம். உள்ளம் கவர் கள்வனை வெள்வளை சோர உள்ளுகிறார் உமைப்பால் உண்டார். ஆனாலும் அப்பரோ தம்மைத் தலைவியாகவும், தலைவிக்கு உற்ற தோழியாகவும், தலைவியை வளர்த்த செவிலித் தாயாகவும் பாவித்துப் பாடுகிற பான்மை அநுபவித்து இன்புறத்தக்கது.

தலைவியாய்: திருநாவுக்கரைய மூர்த்திகள் பண்பட்ட மனத்தியல் புடையவர்கள். நுண்ணிய உணர்ச்சிமிக்கவர்களும் கூட. இறைவனிடத்தில் காதலுள்ளம் செழிக்கப் பெற்றவர்கள். தன்னுடைய தன்மை இறைவனுக்கெதிரே பெண்மையாக இருத்தலை உணர்கிறார். நெஞ்சு நெகிழ்ந்து ஊண் உறக்கம் தவிர்க்கின்றார். தன்போன்றே இறைவனிடத்தில் காதல் கொண்டு ஏங்கிநிற்பாளையும் காண்கிறார். பிறகு இறைவனுடைய தன்மை இன்னதென ஓர்கிறார். "ஏதவனூர், ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்' என்றபடி அவன் யாண்டும் எங்கும் திரிந்து கொண்டிருக்கும் காபாலி ஆவான். அவன் இல்லங்கள்தோறும் பெண்டிர் இடும் பிச்சைமட்டும் ஏற்றுக் கொள்வதில்லையாம். அவர்கள் தம் நிறைகொள்ளும் பெருமையனும்.

"நில்லாதே பல்லூரும் பலிகள் வேண்டி நிரைவளையார்
பலிபெய்ய நிறையுங் கொண்டு"...

(திருப்புறம்பயம் திருத்தாண்டகம்)

என்றுபாடுகிறார் (தலைவி). மேலும் பெண்டிர் நிறை கொள்ளும் இயல்பினனுக்குப் பெண்டிர் இடும் பலியில் ஆர்வம் இல்லையாம். "திருவே (இலக்குமியே)! பலியிடுவாய்" என்று தெருவில் நின்று கேட்பானாம். அவனுக்குப் பலியிட வேண்டும் என்று அவாவி உணவு எடுக்க உட்சென்ற பெண்ணிடம் அழகுகாட்டி (குறிப்பு காட்டி)த் தன்

னை மட்டும் சொல்லி விட்டுச் சென்று விடுவாராம் அக் குறவர் (கயிலாய மலையினர்). அவனுக்கு உணவிடும் பேறின்மையையும், அவன் தன்னைப் பற்றி நோக்கிய விதத்தையும் நினைந்து நினைந்து நெடிதுயிர்க்கிறுள் அத்தலைவி (அப்பர்).

ஏகாச மாவிட்டுஒடு ஒன்று ஏந்திவந்து இடுதிருவே!
பலியென்றூர்க்கு இல்லே புக்கேன்
பாகேனும் கொள்ளார் பலியும் கொள்ளார் பாவியேன்
கண்ணுள்ளே பற்றிநோக்கிப்
போகாத வேடத்தர் பூதஞ்சூழப் புறம்பயம் நம்மூர் என்று
போயினூரே

என்று அப்பர் தலைவி நிலையில் நின்று பாடுவது எத்துணை வியப்பாயிருக்கிறது.

மற்றொரு நிகழ்ச்சியையும் கூறுகின்றூர். அவர் துணையின்றித் தனியே துயில் கொள்கிறூர். அப்போது புறம்பயத்து அரனூர் ஒற்றர்போல வந்து அவர் தம் கைவளைகளை ஒன்று ஒன்ருக எண்ணுகின்றூராம். அவர் அங்ஙனம் எண்ணும் போது தான் கண்ட திருவுருவத்தையும் தாண்டகத்தில் மாண்புறக் கூறுகின்றூர் மருள்நீக்கியார்.

"முற்றொருவர்போல முழுநீறுடி முளைத்திங்கள்சூடி
முந்நூலும் பூண்டு
ஒற்றொருவர்போல உறங்குவேன்கை ஒளிவளையை
ஒன்றொன்ரு யெண்ணுகின்றூர்
மற்றொருவர் இல்லைத் துணையெனக்கு மால்கொண்டாற்போல
மயங்குவேற்குப்
புற்றரவக் கச்சார்த்துப் பூதஞ்சூழப் புறம்பயம் நம்மூர்
என்று போயினூரே."

திருப்புறம்பயத்தில் மாலுற்று கையற்று நின்றது போலவே திருவலம்புரத்திலும் அப்பர் அரனுரை அவாவி நிற்கிறூர். அப்போது அவன் எப்படி பிச்சை ஏற்க வந்தனன் என்பதை எல்லோரும் வியக்கப் பாடி யருள்

கின்றார் அரனெறி பயின்ற அப்பர்பிரான். இயல்பாகத் தோலுடுத்து மூண்டஞ் சாத்தி முனிகணங்கள் புடைசூழ முற்றந்தோறும் வீணை தடவிச் செல்வார் நமசிவபிரான். ஆனால் இப்போது அப்பர் கூறுகிறபடி இறைவன் பிச்சை ஏற்கப் புதுமையாகவும் வருவன் போலும்.

பட்டுடுத்துப் பவளம்போல் மேனியெல்லாம்
பசுஞ்சாந்தங் கொண்டணிந்து பாதம்நோவ
இட்டெடுத்து நடமாடி இங்கே வந்தார்க்கு
எவ்வூரீர் எம்பெருமான் என்றேன் ஆவி
விட்டிடுமாறதுசெய்து விரைந்து நோக்கி
வேறூர் பதிபுகப் போவார் போல
வட்டணைகள் பலநடந்து மாயம்பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே.

பட்டுடுத்திப் பசுஞ்சாந்தம் அணிந்து வண்ணச் சீரடி மண்ணிற்றோய நாடகமாடி வருகிறான் எம்பெருமான். அவனிடம் பேசலாமே என்றெண்ணி "எவ்வூரீர் எம்பெருமான்" என்றேன். அதுகேட்கப் பொறாதவனாய் என் கேள்விக்கு மறுமாற்றமும் அளிக்காது உணவும் ஏற்காது வேறூர் பதிக்குச் செல்வது போல வெகுண்டு நோக்கி நடந்தனன். என் ஆவி அகன்றதோ என எண்ணும் படிச் செய்து பின் மாயமும் பேசி திருவலம்புரத்தில் மன்னினான் எம்பெருமான். "சிறுமுறுவல் வந்தெனது சிந்தை வெளவ மறித்தொருகால் நோக்காதே மாயம்பேசி வலம்புரமே புக்கங்கே மன்னினான்" எம்பெருமான் என்று அப்பர் பெருமான் அற்புதமாகப் பாடி யருள்கின்றார்கள்.

இப்படிப் புறம்பயம் நம்மூர் என்றும் வலம்புரமே நம்மூரென்றும் புகன்று தன்னைப் பிரிந்து சென்றமையால் தலைவி (அப்பர்) இறைவற்குத் தன் பிரிவாற்றாமையை மனங்கொளச்செய்வான் வேண்டித் தூது விடுக்கிறார்.

"சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்

முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன் என் புதுநலமுண் டிகழ்வானோ"

என்றும்,

"கண்டகங்காள் முண்டகங்காள் கைதைகாள் நெய்தல்காள்
பண்டரங்க வேடத்தன் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாந் தடம்மூழ்கி மற்றவனென் தளிர்வண்ணம்
கொண்டநாள் தானறிவான் குறிக்கொள்ளா தொழிவானோ"

என்றும்

மனைக்காஞ்சி இளங்குருகே மறந்தாயோ......

என்றும் பலவாகப் பாடித்தீர்க்கிறார் பரமனையே பாடுவார். காதலுள்ளம் சான்ற காதலிக்குத் தானே இத்தனையும் இயல்பாய் வாய்க்கப்பெறும். அப்பர் நினைத்தொறும் காண் தொறும் பேசுந்தொறும் இறைவனைக் காதலித்தவராயிற்றே!

அப்பர் அகத்துறையில் தலைவி நிலையிலிருந்து பாடிய பாக்கள் பல. ஆரவாரத்தோடு இறைவனைக் காதலிக்க ஆரம்பித்து இறைவனை அமைதியோடு அடைந்து விடுகிறார் அப்பர் சுவாமிகள். தம் காதல் நெறியினைப் பற்றிப் படர்க்கையில் பகர்ந்த பாசுரத்தையும் இங்குச்சுட்டுவோம்.

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே."

தோழியாய்: அப்பர் பெருமான் தலைவனைப் பிரிந்து அயருறுகின்ற தலைவிக்கு ஒப்புயர்வற்ற தோழியாகவும் இருக்கவல்லவர் போலும். தலைவியோ சிவபிரான் மீது தீராக்காதல் கொண்டு மற்று யார் சொல்லையும் மதிக்கிலள்,

"செய்யமேனி வெண்ணீறணி வான்தனை
மையலாகி மதிக்கில ளாரையும்
கைகொள் வெண்மழு வன்கழிப்பாலைஎம்
ஐயனே அறிவானிவள் தன்மையே."

என்று தலைவியின் நிலையைக் கண்டு இரங்குகிறார். அவள் சுற்றம் மற்றும் தோழி தனை துறந்து தனியேபேசி ஏங்குவாள். அவள் என்ன பேசினுள் என்று கேண்மின் கள்! என்று நம்மை நோக்கிக் கூறுகிறார் அப்பர் சுவாமிகள்;

"மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலள்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ
'அழகனே! கழிப்பாலை எம் அண்ணலே!
இகழ்வதோஎனை ஏன்று கொள்' என்னுமே"

என்பது அப்பாடல். அப்படிக் காதலனைப் பிரிந்து தன் புறுகிற தலைவியைத் தேற்றலாமோ என்றால் அப்பர்தம் ஆறுதல் சொல்லையும் பழித்துரைப்பாளாம் அத்தலைவி· தலைவியின் துயரத்தைக் குறைப்பதற்காகத்தோழி (அப்பர்) அவளிடம் பேசவும் முடியவில்லை. பேசாதிருந்தாலோ மேலும் மேலும் சிந்தித்துத் துன்பத்தில் ஆழ்வாளே என்று செய்வதொன்றறியாது இருதலைக்கொள்ளியின் எறும்பு போலத் திகைக்கிறார் அப்பர் சுவாமிகள்.

... ... எம்பிரான்
திருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்துரைக் கிலும் என்சொல் பழிக்குமே"

என்றும்,

செய்ய மேனிவெண் ணீறணி வான்றனை
மையலாகு மதிக்கில ளாரையும்
கைகொள் வெண்மழுவன்கழிப் பாலைஎம்
ஐயனேஅறி வானிவள் தன்மையே.

என்றும்

கருத்தனைக் கழிப்பாலையுள் மேவிய
ஒருத்தனை உமையா ளொரு பங்கனை
அருத்தி யாற்சென்று கண்டிட வேண்டுமென்(று)
ஒருத்தி யாருளம் ஊசல தாடுமே

என்றும் அப்பர் சுவாமிகள் தம் தலைவியைப் பற்றிக் கூறும் போது தம்மை மறந்து அவர் சித்திரிக்கும் தலைவியைக் கண்டு இரங்கி நிற்கிறோமல்லவா?

திருக்கழிப்பாலையில் பாடிய பாக்களில் இரண்டு திருப் பதிகங்கள் தோழிநிலையில் நின்று பாடியருளிய பதிகங் களாகும். "வனபவள வாய்திறந்து" என்று தொடங்கும் பதிகம் மிக்க சிறப்புடையது. இலக்கியச் சிறப்புடையதோடு சிவனைப்பற்றிய செய்திகளெல்லாம் கூறப்பெற்ற சிறப்பும் பெற்றது இத்திருப்பதிகம். இப்பதிகத்தின் பத்துப் பாக்களும் நம்மனோர்க்கு அமுதமாம். அப்பர்பேணும் தலைவி,

"வண்ண மும்வடி வுஞ்சென்று கண்டிலள்
எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள்" என்றபடி

சிவபெருமானை நேரே காணாதவள் போலும். காணாம லேயே அவனைக் காதலிக்கிறாள். அவள் தனியே இருந்து தன் தலைவனைப் பற்றிப் பேசும் பேச்சுக்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் அவள் அவனைக் கண்டிருப்பாள் போலத் தோன்றுகிறது! என்று அப்பர் சுவாமிகள் ஒரு பதிகம் முழுதும் அற்புதமாக வியந்து வியந்து சிவனுடைய செய்திகளையெல்லாம் தலைவி கூறியவாறு கூறி, அவனைக் கண்டாள் கொல்லோ, கண்டாள் கொல்லோ என்று அதிசயித்துப் பாடியிருப்பது நம்மனோர் ஆழ்ந்து அநுபவிப் பதற்கேயாம். ஒரு பாடலை மட்டும் சுட்டிச் செல்வோம்.

"வனபவள வாய்திறந்து வானவர்க்கும் தானவனே
என்கின் றாளால்
சினபவளத் திண்டோதள்மேற் சேர்ந்திலங்கு வெண்ணீற்றன்
என்கின் றாளால்
அனபவள மேகலையோ டப்பாலைக் கப்பாலான்
என்கின்றாளால்
கனபவளம் சிந்தும் கழிப்பாலைச் சேர்வானைக்
கண்டாள் கொல்லோ".

மற்ற பாசுரங்களும் இதைப் போலவே பெருமையுடையன. இனி அப்பர் சுவாமிகள் தலைவியை வளர்க்கும் செவிலித் தாய் நிலையில் நின்று பாடியபடிக் கூறுவோம்.

செவிலியாய்: முதிர்ந்த அநுபவம் உடைய அப்பர் சுவாமிகள் செவிலியாகவும் தம்மைக் கருதிப் பாடியருளுகிறார். தலைவி கொன்றைமாலையை அணிந்து கொண்டு சிவனைக் காதலித்திருக்கிறாள். அவனைக்காணும் போது அப்பருக்கு இரண்டு நினைவுகள் தோன்றுகின்றன. சிவபெருமான் தமது மாலையாகிய கொன்றைப்பூமாலையைத் தன் அன்பிற்குரிய இருவர்க்கீந்தார். திருமணத்தின்போது உமைக்கும், பிறகு கங்கைக்கும் அம்மாலைகள் உரியன. ஆகவே தன்னைப் பிரியாதிடத்தே இருக்கிற மங்கை காணும் படியாக மணமாலையை (கொன்றைப்பூமாலையை) என் மகட்குச் சிவபெருமான் ஈந்திருக்க முடியாது. என்னென்றால் உமை பிணங்கி நிற்பாள். எனவே முடியிலே யிருக்கிற கொன்றைமாலையை ஈந்தாரோ என்றெண்ணினால் அங்குக் கங்கைப் பெண் உடன்பட மாட்டாள். என்மகளோ அவன் தம் மாலையை அணிந்திருக்கிறாள். பின், எம்பெருமான் இம்மாலையை எங்கிருந்து வாங்கிக் கொடுத்தான்? என்று அப்பர் சுவாமிகள் செவிலி நிலையில் தன் மகளைச் சுற்றி நிற்கும் தோழியரை நோக்கி வினவுகிறார்.

> "மங்கை காணக் கொடார் மண மாலையைக்
> கங்கை காணக் கொடார் முடிக்கண்ணியை
> நங்கைமீர் இடைமருதர் இந் நங்கைக்கே
> எங்குவாங்கிக் கொடுத்தார் இதழியே"

ஞானச்செல்வராகப் பெருந் துறவியாக சிவானந்தமூர்த்தியாக பரமனையே பாடும் பாவலராக உலகிற்கு ஆயிரமாயிரம் கற்றுத்தரவல்ல ஆசாரிய திலகமாகத் திகழ்கிற அப்பர் சுவாமிகள் நம் அகத்தை விட்டு நீங்காதவர்கள். அவர்கள் அகத்துறையில் பாடிய அருந்தமிழ்ப் பாக்களில் சிலவற்றை இங்குநாம் வியந்து களித்தோம். அப்பர் பாக்கள் மறைவனத்தோன்றிய திருக் கபாடம் திறந்தன. அவையே

அருட்குலாவும் அறிவினை மூடிய இருட்கபாடம் திறக்கவும் ஏத்துவாம் என்று திருக்கூவப் புராணத்தில் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியருளுவார்கள். நாமும் அவ்வண்ணமே இறைஞ்சி அவரை வினைந்து வாழ்வோம்.

மணியினை மாமறைக் காட்டு
    மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கதவந் திறப்பித்தன
    தெண்கடலில்
பிணியன கல்மிதப் பித்தன
    சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக்கரையர்
    பிரான்தன் அருந்தமிழே!

"தர்ம சக்கர"த்திற்கு விடை

(புலவர்மணி-சித்தாந்த வித்தகர்

முரு. பழ. இரத்தினம் செட்டியார்)

திருப்பராய்த்துறை தபோவன வெளியீடாகிய, "தர்ம சக்கர"த்தில் சௌமிய ஆண்டு சித்திரைத் திங்கள் இதழில், "கடவுளால் முடியாத செயல்கள்" என்னும் என் நூலில் யான் சங்கரர் வேதாந்தம் பொருந்தாதெனை எழுதியுள்ள பகுதியை மறுத்துச் சுவாமி சித்பவானந்தா அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். சங்கரர் வேதாந்தத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் நெடுங்காலமாகக் கருத்துப் போராட்டம் உண்டென்பதைச் சமய உலகம் அறியும். சுவாமிகள் வேதாந்த சாத்திரங்களில் நிறைந்த பயிற்சியும் அழுத்தமான ஈடுபாடும் உடையவர்கள். எனவே அவர்களின் மறுப்பு எதிர்பார்க்கக் கூடியதே ஆகும். பரந்த உள்ளமும் தூய துறவும் நடுநின்று ஆராயும் நேர்மையும் கூரிய சிந்தனைத் திறனும் மிக்க சுவாமிகளோடு கருத்துப் போராட்டத்தில் ஈடுபடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை

அளிக்கிறது. இப்போராட்டத்தால் சமய உலகம் வேதாந்த-சித்தாந்தக் கருத்துக்களைக் குழப்பமின்றி அறிந்துகொள்ள வாய்ப்புண்டு. இவ்வாய்ப்பினை நல்கிய சுவாமிகளுக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

சுவாமிகள் யான் எழுதியுள்ள பகுதியை அப்படியே எடுத்துக்காட்டி அப்புறம் தமது மறுப்பைப் பின்வருமாறு துவங்கியிருக்கிறார்கள் :—

"இத்தடைகள் எல்லாம் சங்கரர்க்கு விளங்கவில்லை என்றும் தமக்கு மட்டும் அவை எட்டியுள்ளன என்றும் கூறியிருப்பதாகத் தொனிக்கிறது.

சுவாமிகள் இப்படி எழுதுவார்களென நான் எதிர்பார்க்கவில்லை. நான் எழுப்பியுள்ள தடைகள் அனைத்தும் சைவ சித்தாந்த சாத்திரங்களாகிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சங்கற்ப நிராகரணம் ஆகியவற்றில் உள்ளவையே ஆகும். நூலின் துவக்கத்திலேயே சைவ சித்தாந்த வழிநின்று எழுதுவதாக மிக விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். "இத்தடைகள் சங்கரர்க்கு விளங்கவில்லை என்றும் சைவ சித்தாந்திகளுக்கு மட்டுமே அவைகள் எட்டியுள்ளன என்றும் கூறியிருப்பதாகத் தொனிக்கிற" தெனச் சுவாமிகள் பொதுமையில் குறிப்பிடுவதுதான் முறையாகும். என்னையும் சங்கரரையும் பிணைத்து எழுதுவது முறையாகாது. நான் ஏதோ மிக்க செருக்குடன் இவற்றை எழுதியிருக்கிறேன் எனப் பிறர் கருத அஃது இடம் அளிக்கும். தனிப்பட்ட முறையில் எழுதியவரைத் தாக்குவது அளவை நூல் மரபுக்கு முரணாகும். சுவாமிகளின் பரந்த உள்ளத்திற்கு இது சிறப்பாகாது. பெரியவர்களும் உணர்ச்சிவயப்படுதல் இயல்பே என்பதை இது புலப்படுத்துகிறது.

"ஜாக்ராதாவஸ்தையிலும் சொப்பனவஸ்தையிலும் இந்நூலாசிரியர் கூறுகிற தடைகளும் விடைகளும் இடம்

பெறுகின்றன; ஆகையினல் இவை யாவும் வியாவஹாரிக சத் என்னும் நிலேயில் அடங்கியிருக்கின்றன; ஜாக்ரதாவஸ்தையில் ஜகத், ஜீவன், பரம் ஆகிய முப்பொருள் உண்மையாம்; சுகப்தியில ஜகத்தும் ஜீவனும் இல்லே; பிரக்ஞானம் ஒன்றே எஞ்சியிருக்கிறது; சதாசிவ ரூபம் அத்வைத நிலே; அவனேத் தவிர ஆங்கு வேறு பொருள் இல்லே; மனிதன் அடைவதற்குரிய முடிந்த நிலே பாரமார்த்திக ஸத் என்று சங்கார் உறுதி கூறியிருக்கிருர்,''—சுவாமிகளின் மறுப்பில் காணப்படும் முக்கிய கருத்து இஃதே ஆகும்.

சாக்கிராவத்தையில் இருக்கின்ற அதே பொருள்தான் சுகப்தியிலும் இருக்கின்றது. சுகப்தியில் அந்தப் பொருள் இல்லாவிட்டால் அது சுகப்தி அவத்தையாகாது. இது போலவே வியவஹாரிக சத் நிலேயில் இருக்கின்ற அதே பொருள்தான் பாரமார்த்திக சத் நிலேயிலும் இருக்க வேண்டும். பாரமார்த்திக சத்நிலேயில் இருக்கும் பொருள் சதாசிவரூபம்—பிரமம்—சுத்த சிவம் என்றும் அதனேத் தவிர வேறு பொருள் இல்லே என்றும் சுவாமிகள் குறிப்பிடுகிருர்கள். அப்படியானல் வியவஹாரிக சத் நிலேயில் ஜகத், ஜீவன், பரம் என விளங்குவதும் அதுவாகவே இருக்க வேண்டும். பிரமப் பொருள் முற்றறிவும் முழுநிறைவும் முழு வல்லமையும் உள்ளதெனச் சங்கரர் வேதாந்தம் கூறுகிறது. இத்தகைய பொருளுக்கு எப்படி வியவஹாரிக சத் நிலே ஏற்பட்டது? அதாவது முற்றறிவும் முழு நிறைவும் முழு வல்லமையும் உள்ள அந்தப் பொருள் ஏன் ஜகத், ஜீவன், பரம் என மூன்ருக வியவஹரிக்க வேண்டும்?

முற்றறிவுப் பொருளாதலல் அறியாமை காரணமாக அதற்கு வியவஹாரிக சத் நிலே உண்டாகிறதெனச் சொல்ல வாராது; மாயையால் இந்தச் சலனம் ஏற்பட்டதென்ருல் பிரமத்திலும் பார்க்க மாயை வலியுடையதென்று கொள்ள வேண்டியது வரும். எனவே கயிற்றில் அரவு போல—இப்பியில் வெள்ளி போல—மாயையால் இத்தோற்றம் ஏற்படுகிற

தெனச் சொல்வது முற்றறிவுப் பொருளாகிய பிரமத்திற்கு இழுக்காகவே முடியும். வேண்டுமெனறோ லீலையாகவோ, ஒரு காரணமும் இன்றியோ, மாயையில் பிரமம் பிரதிபலிக்கிறதென்றால், பாரமார்த்திக சத் நிலை அதற்கு ஒருபோதும் நிலையாக ஏற்படாது; வேண்டுமென்றோ, லீலையாகவோ, ஒரு காரணமும் இன்றியோ அது பின்னும் மாயையில் பிரதிபலித்துக் கொண்டேதான் இருக்கும். இதனால் பாரமார்த்திக சத் நிலை அதற்குப் பயனற்றதாகவும் நிலையற்றதாகவும் போய்விடும். ஜகத்தாகவும் ஜீவனாகவும் அது வடிவெடுக்கிறதென்றால், பூரணப் பொருளாகிய அஃது இங்ஙனம் வடிவெடுப்பதால் புதிதாக எந்தப் பயனும் அடையப் போவதில்லை. ஒரு நோக்கமும் இன்றி வடிவெடுக்கிறதென்றால், அஃது என்றும் வடிவெடுத்துக் கொண்டேதான் இருக்கும். ஆகவே பாரமார்த்திக நிலைக்குச் செல்லும் முயற்சி பயனற்றதாகவே முடியும்.

எத்தனையோ வகையான சமாதானங்களைச் சொல்லிப் பார்த்தும் அவை யாவும் பொருந்தாமல் இருப்பதை உணர்ந்த சுவாமி விவேகானந்தர், "வியவஹாரிக சத் நிலை ஏன் ஏற்பட்டதென்பதற்கு வேதாந்தத்தில் விடை இல்லை", என்று கூறியிருக்கிறார். வேதாந்தம், "இருப்பது ஒரே பொருள்", என்னும் கொள்கையையுடையது. ஜகத், ஜீவன், பரம் என மூன்றாக ஏன் அஃது வியவஹரிக்கிறதென்பது மிக முக்கியமான கேள்வியாகும். இக் கேள்விக்கு விடை இல்லையென்றால், "இருப்பது ஒரே பொருள்தான்", என்னும் கொள்கை பிழையுடையதென்று கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

சங்கரர் ஓரிடத்தில், "அஞ்ஞானம் நமக்கு ஏன் வந்ததென ஆராய்வது அநாவசியமாகும்; வீட்டில் நெருப்புப் பற்றிக்கொண்டால், அஃது எங்ஙனம் பற்றியதென்பதை ஆராயாமல் அணைக்க முயல்வதே அறிவுடைமையாகும்," எனக் கூறியிருக்கிறார். வீட்டில் நெருப்புப் பற்றினால் ஆராய வேண்டியதில்லைதான்; கடலில் நெருப்புப் பற்றிய

தென்று சொன்னால் அதனை ஆராயாமல் இருக்க வாராது. உயிர்க்கு அறியாமை உண்டு என்றால் ஆராயவேண்டியதில்லை. பிரமத்திற்கு அறியாமை உண்டு என்னும்போது ஆராயாமல் இருக்க வாராது. இதனால் சங்கரர் சொல்லும் சமாதானம் பொருந்தக்கூடியதாக இல்லை.

சுவாமிகள், சேதனம், அசேதனம், ஆகிய தன்மைகள் பிரமத்திற்கு உண்டு என்னும் கருத்தில் "தர்ம சக்கரம்" சௌமிய வைகாசி இதழில் எழுதியிருக்கிறார்கள். பிரமம் முற்றறிவுப் பொருள் என்று சங்கரர் கூறியிருக்கிறார்.

பூரண அறிவுப் பொருளிடத்தே அறியாமை ஒருசிறிதும் இருக்க இயலாது. மேலும் பிரமத்திற்குச் சேதன, அசேதனத் தன்மைகள் உண்டென்றால், எக்காலத்தும் அத்தன்மைகள் இருக்கவே செய்யும். அப்படியானால் பாரமார்த்திக சத் நிலை அதற்கு ஏற்பட வழியில்லை. ஒரு சமயம் இருந்து, மற்றொரு சமயம் இல்லாமற் போவது செயற்கையே அன்றி இயற்கையாகாது. பிரமத்திற்கு அசேதனத் தன்மை செயற்கை என்றால், முற்றறிவுப் பொருளாகிய அஃது ஏன் அதன் வயப்படவேண்டும்? "பிரமம் முற்றறிவுப் பொருள் அன்று; அதனால் அசேதனத் தன்மை எய்துகிறது; பின்னர் முற்றறிவுப் பொருளாகின்றது", என்றால், அதனை உய்விக்க மற்றொரு முற்றறிவுப் பொருள் தேவைப்படும். குறைந்த அறிவுள்ள ஒன்று, தானே உய்ய இயலாது. எனவே எப்படிப் பார்த்தாலும் பிரமம் வியவஹாரிக சத் நிலைக்குட்படுவதென்பது பொருத்தமாக இல்லை.

"ஜீவன்தான் வியவஹாரிக நிலைக்குட்படுகின்றான்; பிரமம் அதன் வயப்படவில்லை; ஜீவன் ஜீவபோதம் நீங்கியதும் பிரமமாகின்றான்," என்று சொல்லலாம். அப்படியானால் ஜீவன் யார்?

முற்றறிவுப் பொருளாகிய பிரமம் எக்காரணம் கொண்டும் ஜீவனாகத் தோன்ற வேண்டியதில்லை. ஜீவன் ஒரு

தோற்றம் என்றால் அத்தோற்றம் யார்க்கு? தனக்குத் தானே தோன்றிக் கொள்கிறான் என்றால், அவன் உண்மையில் இருப்புள்ளவனாவானே அன்றித் தோற்றமாகமாட்டான். ஆகவே அவனை ஒரு தோற்றம் என்றால், அத்தோற்றம் அவனை அல்லாத வேறொன்றிற்குத்தான் சொல்லவேண்டும். வேறு பொருள் யாது? பிரமம் ஒன்றுதான் இருக்கிறது. எனவே பிரமத்திற்குத்தான் அத்தோற்றம் ஏற்படவேண்டும். முற்றறிவுப் பொருளாகிய அதற்கு இப்படி ஒரு தோற்றம் ஏற்படக் காரணம் இல்லை. இதனால் அவன் ஒரு தோற்றம் என்பது பொருந்தாமற் போகிறது.

ஜீவன் "தோற்றம்" அல்லன்; அவன் அநாதியே உள்ள பொருள் என்றால், அவன் நித்தியன் ஆகி விடுவான். நித்தியனுக்கு எக்காலத்தும் அழிவில்லை; பாரமார்த்திக சத் நிலையில், ஜீவபோதம் நீங்கப்பெற்றாலும் நித்தியனாகிய அவன் இருக்கவே செய்வான். பிரமத்துடன் அவன் கலந்து நிற்கும் ஒற்றுமை பற்றி வேண்டுமானால் உபசாரமாகப் பிரமமாகின்றான் என்று சொல்லலாமே ஒழிய, நித்தியனாகிய அவன் அந்நிலையில் இல்லாமற் போகின்றான் எனச் சொல்லவாராது. இதனால் பாரமார்த்திக சத் நிலையில் இருபொருட்களின் இருப்புச் சொல்ல வேண்டியது வரும். எனவே ஒரே பொருள்தான் பாரமார்த்திகத்தில் உண்டென்பது பொருந்தாமற் போகும்.

ஜீவன் நித்தியன் அல்லன் என்றால், அவனை யாரோ தோற்றுவித்திருக்க வேண்டும். பிரமத்தைத் தவிர வேறு பொருள் இல்லாததால், அதுதான் அவனைத் தோற்றுவித்திருக்க வேண்டும். தோற்றுவித்த அவனை இல்லாமற் செய்துவிட்டுப் பிரமம் மட்டும் தானாகப் பாரமார்த்திகத்தில் நின்றால் அவனைத் தோற்றுவித்த செயல் பயனற்றதாகவும் தேவையற்றதாகவும் முடியும். எனவே எப்படி ஆராய்ந்தாலும் இருப்பது ஒரே பொருள்தான் என்பது பொருந்தாமற் போகிறது. பாரமார்த்திகத்தில் ஜீவன், சீவபோதம் நீங்கப்பெற்றுப் பிரமத்துடன் கலந்து நின்று பேரின்பத்தை

நுகர்வான் என்றும் ஆண்டும் உயிரும் இறையும் உண்டென்றும் கொள்வதுதான் பொருத்தமாக இருக்கிறது. சிவ போதம் நீங்குவதென்பது சிவன் இல்லாமற் போவதன்று. தன்முனைப்பு நீங்குவதே சிவபோதம் நீங்குவதாகும்.

சைவ சித்தாந்தம் உயிரை நித்தியப் பொருள் என்றும், முத்தியில் அஃது இறைவனுடன், "தானென அவனென", வேறின்றிக் கலந்து நின்று பேரின்பத்தை நுகரும் என்றும், உயிரைப் பற்றியுள்ள பாசமும் நித்தியப் பொருளே என்றும், அது முத்தியில் உயிரைப் பற்ற முடியாமல் கிடக்கும் என்றும், ஆகவே பெத்தம், முத்தி இரண்டிலும் முப் பொருட்கள் உண்டென்றும் முடிவு செய்திருக்கிறது. இஃது எல்லா வகையாலும் பொருத்தமான முடிவாக இருக்கிறது.

"ஜீவன்தான் பிரமம்; அஞ்ஞானம் நீங்கியதும் பிரமமாக விளங்குகிறான்; தனியாகப் பிரமமென ஒன்றில்லை", என்றால் இந்தப் பிரமத்தை முற்றறிவுப் பொருள் எனச் சொல்லவாராது; இதனை உய்விக்க மற்றொரு முற்றறிவுப் பொருள் வேண்டும். தானே உய்யும் என்றால், வியவஹாரிக சத்நிலைக்குள் அஃது ஏற்கனவே அகப்பட்டுக் கொண்டிருக்காது. தெரியாமல் அகப்பட்டுக் கொண்டதென்றால், அதனைக் காப்பாற்ற மற்றொரு பொருள் அவசியம் வேண்டப்படும். பாரமார்த்திக சத்நிலையில் அப்பொருளும் இருக்குமாதலால், ஒரே பொருள்தான் உண்டென்பது பொருந்தாமற் போகும்.

"வியவஹாரிக சத்நிலை என்பதே ஒரு பொய்யான நிலை" என்றால், அதனைப் பொய்யான நிலையென யார் முடிவு செய்வது? ஜீவனை ஒரு பொய்த் தோற்றமாகுமாதலால், அது முடிவுசெய்ய வாராது; செய்தாலும் அது பொய்யாகவே இருக்கும். பிரமம் முடிவுசெய்யும் என்றால், முற்றறிவுப் பொருளாகிய அதற்குப் பொய்யான நிலையே தோன்ற இடமில்லை. ஆகவே அது முடிவு செய்ய வேண்டிய

வேலையே இல்லை. அப்படியே முடிவு செய்யுமானால், செய்கின்ற அஃது பிரமமாக இருக்காது. இதனால் அது செய்யும் முடிவும் பொய்யாகவே போகும். இந்த மாதிரி ஆராய்வோமானால், வேதாந்தக் கொள்கை பொருளற்றதாயும் பயனற்றதாயும் முடிவதைக் காணலாம்.

சுவாமிகள் "அநுபவத்தில் பெறவேண்டிய பாரமார்த்திக சத்நிலையை வியவஹாரிக நிலையில் உழன்று கொண்டு விசாரிப்பது வீண் பொழுதுபோக்காகும். மாணிக்கவாசகர் இயற்றியுள்ள திருப்படையாட்சி இதனை விளக்குகிறது; நிர்விகற்ப சமாதி நிலை அநுபவத்தில்தான் தெரியும். ஏனையவர்க்கிடையில் அதை மறுப்பவர்களைவிட அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாதென்று சொல்பவர் அறிஞர்" எனத் "தர்ம சக்கரம்" சௌமிய சித்திரை இதழ் பக்கம் 145ல் குறிப்பிடுகிறார்கள்.

விவாதிக்க வேண்டாம் என்றால், சுவாமிகள் அதே இதழ் பக்கம் 144ல், "இதற்குச் சங்கரர் விடை மிகத் தெளிவானது; யுக்திக்கும் அநுபவத்துக்கும் பொருந்தியது," என்று ஏன் எழுதவேண்டும்? யுக்திக்குப் பொருந்தியதென்றால் விவாதிக்கத்தானே வேண்டும்? சங்கரரின் பிரம சூத்திர உரை முழுதும் விவாதமயமாகத்தான் இருக்கிறது; புறமதக் கொள்கைகளை விவாதித்துத்தான் அவர் மறுத்திருக்கிறார். வேதாந்த ஞானமே விசாரணையால்தான் வரும் என்று அவர் சொல்கிறார். முடிந்தவரை விவாதித்து விட்டு, முடியாதபோது, "விவாதிப்பதில் பயனில்லை, அநுபவத்தில்தான் தெரியும்," என்பது நேர்மையாகுமா? அநுபவம் பெறாமலே, அநுபவம் பெற்றிருப்பது போலச் சொல்பவர் உலகில் மிக அதிகம். அவர்களை மறுப்பவர்களைவிட மேலானவர்கள் என்று எவ்விதம் சொல்வது?

அநுபவத்தில்தான் தெரியும் என்பது உண்மை; ஆனால் யுக்தியால் அந்த நிலையைப் பொருந்தச் சொல்லவும் இயலும்

என்பதால்தான், "சுருதி, யுக்தி, அநுபவம்" மூன்றையும் பெரியோர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அநுபவ நிலையை எப்படித் தெரிந்து கொள்வது? சுவாமிகளே, "அநுபவித்தவர்கள் வந்து சொல்லிவிட்டுப் போவார்கள்" என எழுதியிருக்கிறார்கள். ஆசிரியர் மன வாசகம் கடந்தார் அநுபவ ஞானி; அவர் அநுபவ ஞானி என்பதை அவர் பெயரே புலப்படுத்தும். அவர் "உண்மை விளக்கம்" என்னும் பெயரில் ஒரு சாத்திரம் செய்திருக்கிறார். அது சைவ சித்தாந்த சாத்திரம் 14ல் ஒன்றாக விளங்குகிறது. அதன்கண் அவர்,

"முத்திதனில் மூன்று முதலும் மொழியக் கேள்,
சுத்த அநு போகத்தைத் துய்த்தல் அணு—மெத்தவே
இன்பங் கொடுத்தல் இறை இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள் அப் பா"

என்று, முத்தியில் முப்பொருளும் உண்டென்று தெளிவாகக் கூறியருளியிருக்கிறார். அவர் அநுபவத்தில் முத்தியில் முப்பொருளும் உண்டென்று புலனாகியிருக்கிறது. அவர் அநுபவ ஞானி அல்லர் என்றால், வேதாந்தக் கொள்கையினைக் கூறுபவரும் அநுபவ ஞானிகள் அல்லர் எனச் சொல்ல வேண்டிய வருந்தத்தக்க நிலை ஏற்படும்.

சைவ சித்தாந்தம் துவிதக் கொள்கையுடையதன்று. அது சுத்தாத்துவிதக் கொள்கையுடையது. முத்தியில் உயிர்க்குச் சிவம் ஒன்றே விளங்கும்; ஏனையதொன்றும் விளங்காது. விளங்குவது வேறு; இருப்பது வேறு; ஆண்டு உயிர் இருக்கிறது; ஆனால் அதற்குச் சிவம் ஒன்றே தான் அங்கே விளங்குகிறது. இதனையே மணிவாசகர் திருப்படையாட்சியில் அருளிச்செய்திருக்கிறார். அவர் விளங்குவது சிவம் ஒன்றே எனச் சொல்லியிருப்பதை, இருப்பது சிவம் ஒன்றே எனச் சொல்லியிருக்கிறாரென உரை செய்வது பொருந்தாது.

பெத்தம், முத்தி இரண்டிலும் இறைவன் உயிரோடும் உலகோடும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் இருப்பான் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. அவன் ஒன்றாயிருப்பது பற்றியும் அவனே இன்றியமையாமை பற்றியும், "தானே உலகேழும் ஆனானை", எனச் சொல்லியிருப்பதை, "அவனே சடமும் ஆவான்" எனப் பொருள் செய்யக்கூடாது. சைவ நூற்களைச் சைவ சித்தாந்தக் கொள்கைப்படி பொருள் செய்வதுதான் முறையாகும்.

சுவாமிகள் தாயுமானாரைத் தம் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "அத்துவிதம்" என்னும் சொல்லுக்குப் பொருள் கண்டவர் பலர். சங்கரர், இராமாநுஜர், மாத்துவர், மெய்கண்டார் முதலியோர் அதற்குப் பொருள் கண்டுள்ளனர். அவர்களுள் "மெய்கண்டார்" கண்ட பொருளே உண்மைப் பொருள் என்று, "பொய்கண்டார் காணும் புனிதமெனும் அத்துவிதச் சொற்குப் பொருள் கண்ட மெய்கண்டார்" எனத் தாயுமானார் பாராட்டியிருக்கிறார். இதிலிருந்து தாயுமானார்க்குச் சைவ சித்தாந்த ஆசிரியராகிய மெய்கண்டார் கண்ட பொருள்தான் உடன்பாடு என்பது இனிது புலனாகும். மேலும் அவர், "என்றனை நீ அன்றளம் யாம்", (கல்லாலின்-17) என உயிர்க்கும் இறைவனுக்கும் அநாதி நித்தியம் கூறியிருக்கிறார். "யாங்களே கடவுள் என்றிடும் பாதகத்தவரும்" எனச் சிற்சுகோதய விலாசத்தில், "நாம் பிரமம்" என்னும் கொள்கையைக் கண்டித்திருக்கிறார்.

"ஜடம் சேதனமாக மாறுவது இயற்கையின் செயல்" எனச் சுவாமிகள் "தர்ம சக்கரம்" சௌமிய வைகாசி இதழில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "ஜடம் என்றும் ஜடமே; சேதனம் என்றும் சேதனமே," என்பதுதான் வேதாகமத் துணிபாகும்.

ஜடம் சேதனமாக மாறுகிறதென்று வைத்துக் கொள்வோம்; அப்படியானால் சேதனமும் சடமாக மாறும்

அன்றோ? அங்ஙனம் மாறினல் பாரமார்த்திக சத்திலே என ஒரு நிலை எக்காலத்தும் ஏற்பட முடியாது. "ஜடம் சேதனமாக மாறும்; சேதனம் ஜடமாக மாருது," என்ருல் அதனை அங்ஙனம் நிலைப்படுத்த வேருேர் ஆற்றல் தேவைப்படும். அவ்வாற்றல் தன்னளவில் முழுதும் சேதனமாக இருந்தால் தான் இங்ஙனம் நிலைப்படுத்த முடியும். அத்தகைய ஆற்றலையே உபநிடதம் "பிரமம்" எனக் குறிப்பிடுகிறது. ஆகவே பிரமத்திற்கு அசேதனத் தன்மையும் உண்டென்பது சிறிதும் பொருந்தாது.

"பௌதிக விஞ்ஞானத்திற்குத் தம் கருத்து உடன்பாடு" என்றும் சுவாமிகள் கூறியிருக்கிருர்கள். "சட ஆற்றல் வேறு; அறிவாற்றல் வேறு," என்று கூறும் பௌதிக விஞ்ஞானிகளும் நிறைய இருக்கிருர்கள். விஞ்ஞானம் இதுபற்றிய திட்டமான முடிவை இன்னும் சொல்லவில்லை.

தனக்கு மேலாக ஒரு பரம்பொருள் உண்டென்று மனப்பூர்வமாக நம்பினல்தான் உண்மையான பத்தி உண்டாகும். "இருப்பது ஒரே ஒரு பொருள்தான்" என்று உண்மையாகவே நம்பினல் பத்தி தோன்றுவதற்கே இடமில்லை. பத்திதான் மனிதனை உய்விக்கும். அதற்குத் தனக்கு மேலே உண்மையாகவே ஒரு பரம்பொருள் உண்டென்று கொள்ள வேண்டியது மிக அவசியமாகும். "நாமும் உண்டு; நமக்கு மேலே பரமும் உண்டு" என்ருல் தான் பத்தி வரும். "பிரமம் மட்டும்தான் உண்டு" என்ருல் யார் யாரைப் பத்தி செய்வது? எனவே இறைவன் ஒருவன் உண்டெனக் கொண்டு, அவனைப் பத்தி செய்வதே நம் கடமையாகும்.

மதிப்புரை

சைவசித்தாந்தத்தின் அவசியம்

(ஆங்கில நூல்)

(சைவசித்தாந்தத்தின் பொருத்தம். Relevance of Saiva Siddhanta. காசியிலும் அலஹாபாத்திலும் ராவ் சாகிப் நல். முருகேச முதலியார் அவர்கள் செய்த நான்கு சொற்பொழிவுகளினுடைய தொகுப்பு. வெளியிட்டோர்: அண்ணாமலை சர்வகலாசாலை, 1968. (நூல் கிடைக்கும் இடங்கள் :-(1) பாரி நிலையம், 59. பிராட்வே, சென்னை-1. (2) சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிராட்வே, சென்னை-1. விலை: ரூ. 6-66. தபால் செலவு தனி)

திருப்பனந்தாள் காசிமடத்து அதிபர் ஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் ஏற்படுத்திய அறக்கட்டளையின் படி, ஸ்ரீ நல். முருகேச முதலியார் அவர்கள் அலஹாபாத் சர்வகலாசாலையிலும், காசி சர்வகலாசாலையிலும் 1962-63 இல் நான்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். அவை நீண்ட நாள் கழித்து, 1968 இல் அண்ணாமலை சர்வ கலாசாலையால் புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவர்களுடைய பேச்சுக்கள் ஓரளவு சைவசித்தாந்தக் கோட்பாடுகள் அனைத்தையும் குறிப்பிடுவனவாய் உள்ளன. முக்கியமாக, அத்துவைதத்தை ஒட்டிச் சைவ சிந்தாந்த விளக்கம் சொல்வதும், இக்காலத்துக்குச் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளும் அவற்றை உணர்ந்து நடப் பதும் எவ்வளவு முக்கியம் என்று காட்டுவதும் சொற் பொழிவுகளின் அடிப்படை நோக்கம். பொதுவாக, அவர் நம் சமயத்தின் அடிப்படைக் கருத்துக்கள் யாவை என்ப தையும் தாயுமானவர் சொன்னபடி, பிற சமயங்கள் அனைத்தையும் விழுங்கி வைதிக சைவம் ராஜாங்கத்தில் அமர்ந்தது என்று சொல்லத்தகும் என்பதையும் நன்கு விளக்கியிருக்கிறார்.

முதல் சொற்பொழிவு முப்பொருள் உண்மையையும் அதன் தொடர்பையும் விளக்குவது. பதி இலக்கணம், பாச இலக்கணம், பசு இலக்கணம் ஆகிய மூன்றும் இப்

பொருள்களுக்குள்ள தொடர்பும் விளக்கப்படுகின்றன. அடுத்து, இவற்றின் அடிப்படைத் தத்துவங்கள் நன்கு ஆராயப்படுகின்றன. மாயையினுடைய இயல்பும் ஆணவத்தின் இயல்பும் விளக்குமிடத்து பிற சமய வாதங்களிலுள்ள குறைபாடுகளை ஆசிரியர் நன்கு எடுத்துக் காட்டியிருக்கின்றார். அடுத்து, வினையைக் கூறுமிடத்து சைவ சமய தத்துவங்களை ஓரளவு விளக்கியிருக்கிறார். இறுதியில், எவ்வாறு மெய்கண்டார் வேதாகமங்களின் சாரத்தையும் திருமுறைகளின் தத்துவக் கருத்துக்களையும் தொகுத்துச் சைவ சித்தாந்தமாக வகுத்துக் கொடுத்திருக்கிறார் என்பதையும் இப்பகுதி நன்கு எடுத்துக்காட்டும். இங்கு மகா வாக்கியங்களின் பொருள் எவ்வாறு குழப்பத்துக்கு இடமில்லாமல் மெய்கண்டாரால் காட்டப்பட்டது என்பதையும் சொல்கிறார். சைவம் பொதுவாக வைதிகச் சடங்குகளில் அதிக ஈடுபாடு கொள்ளவில்லை என்பதையும் காட்டுகிறார்.

இரண்டாவது சொற்பொழிவு அத்வைதத்தின் பொருளை விளக்குவது. அத்துவைதம் என்ற சொல்லின் பொருள் சம்பந்தமாக, சங்கர வேதாந்திகளுக்கும் சைவ சித்தாந்திகளுக்கும் என்றுமே ஒரு கருத்துப் போராட்டம். வேதாந்திகள இரண்டில்லை ஆகவே ஒன்று என்பார்கள்; "பதியைத் தவிர மற்றதெல்லாம் மாயை, ஆகவே பதி ஒன்றுதான் உண்டு. இதுவே ஏகம்" என்ற அவர்கள் கொள்கையை மறுத்துச் சைவ சித்தாந்திகள் அத்துவைதம் என்பதை அன்மைப் பொருள் கொண்டு இரண்டு அல்ல என்பதனால் ஒன்று என்று முடிவு செய்தல் ஆகாது என்று சொல்லி முப்பொருள உண்மையை நிலைநாட்டுவார்கள். இந்த வாதம் முதலில் நன்கு விளக்கப்படுகிறது. ஆன்மா தத்துவங்களை உணர்ந்து நீங்கி, தன்னையும் உணர்ந்து நீங்கி, முடிவாகச் சிவ பரம்பொருளைக் கண்டு அதன் அருளில் தோய்ந்து அதை அனுபவிக்கின்ற நிலையைத் தசா காரியம் என்று சைவ சித்தாந்தத்தில் குறிப்பிடுவார்கள். இதே தசகாரியம் வேதாந்தத்தில் வேறு விதமாகவும் சொல்லப்பட்டுள்ளது. அங்கு இதற்குச் சிறப்பான பொருள் இருப்பதாய்த் தெரியவில்லை, சைவத்தில் காணும்

பூரணமான பொருள் வலிமை அங்கு இல்லை. படிப்படியாக தத்வருபம் தரிசனம் என்று தொடங்கி சிவயோகம் சிவபோகம் என்பதாய்ப் போய் முடிகின்ற படிக்கிரமத்தை ஆசிரியர் அழகுபெற விளக்கியிருக்கிருர்.

சைவத்தின் சிறப்பான ஒரு தத்துவம் அருளின் தன்மை. அது அடுத்த பகுதியில் பேசப்படுகிறது. ஆன்மாக்களின் மூன்று வகையினரையும் குறிப்பிட்டு, சகலருக்கு இறைவன் குருவாக வந்து அருள் செய்கிருன் என்று சொல்லி அவனுடைய அருள் பெறுவது குருவின் மூலம் என்று இப்பகுதி காட்டுகிறது. குருவே சிவமெனக் கூறினன் நந்தி; இங்கு ஆங்கிலத்தில் மிஸ்டிசிசம் என்று சொல்லுகின்ற யோக-ஞான மார்க்கமும் தத்துவக் கோட்பாடுகளும் குருவிடமாக எப்படி ஒருமுகப்படுகின்றன என்பதையும் ஆசிரியர் காட்டுகிருர். ஆன்மா எவ்வளவு பதிஞானம் கொண்டு முயன்ருலும், ஆன்மசித்தி பெற முடியாது. குரு உபதேசத்தின் மூலம் சக்திநிபாதம் ஏற்பட்டு பதிஞான உணர்வு வரவேண்டுமென்பதை ஆசிரியர் நன்கு கூறுகிருர். இதுபற்றி அரவிந்தர் கொள்கையும் கூறப்பட்டுள்ளது. முத்தி நிலையை விளக்குவது ஒரு கடினமான பொருள். முத்தியிலும் மூன்று முதலும் உள்ளன என்பது சற்காரிய வாதம். இதை ஆசிரியர் திறமையாகக் காட்டியிருக்கிருர். காட்டிய இடத்தில் சித்தாந்தத்துக்கும் பிற சமயங்களுக்குமுள்ள முத்தி பேதங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

அலஹாபாத்தில் செய்த நான்காம் சொற்பொழிவு, இன்றைய உலகத்தில் சைவ சித்தாந்தத்தின் தேவையை எடுத்துக்காட்டுகின்றது. இதன் இரு சிறப்புக் கோட்பாடுகள், இது பூரண வாழ்க்கை லட்சியமும் சிவசாயுச்சியமும் நோக்கமாய்க் கொண்டது என்பது. இந்தக் கருத்தில் இது காஷ்மீர சைவத்தினின்று வேறுபடுவது. அடுத்து இது இறைவன் அன்பு வடிவினன் என்று போதிப்பது. இவ்வாறு ஆசிரியர் கூறி, எப்படி சைவ சித்தாந்தம் இன்று வரை காண்கின்ற விஞ்ஞான முன்னேற்றக் கருத்துக்களுக்கு உடன் வருகிறது என்று காட்டுகிருர். விஞ்ஞா

னம் எல்லாவற்றையும் அளந்து கண்டுவிடவில்லை. காண முடியாத பொருளும் நிலையும் உள்ளன. அந்த மனிதனுடைய புலனும் ஆராய்ச்சியும் செல்ல முடிவதில்லை. இதேபோல, தத்துவத்திலும் மனித அநுபவத்தைக் கடந்த பொருள்கள் உள்ளன. அங்கு சிவபெருமானுடைய அபின்ன சக்தியான கருணையே வழிகாட்டி உலகைச் செம்மைப்படுத்தும். பொருமையும், மயக்கமும், அழிவும் நிலவுகின்ற உலகத்தில் அன்பே சிவம் என்று போதிக்கின்ற சைவம், அறிவுக்கு அப்பாலுள்ள பேரொளியை நன்கு தூண்டிவிட்டுக் காட்டுகிறது என்று ஆசிரியர் முடிக்கிறார். இங்கு அச்சமுமில்லை, அழிவுமில்லை : சாசுவதமான ஆனந்தமே.

இப்புத்தகத்தின் சிறப்பு இது ஆங்காங்கு நூலகத்திலும் அடிக்குறிப்பிலும் பிற மதக் கருத்துக்கள் பலவற்றைக் காட்டிலும் சைவக் கருத்துக்கள் எவ்விதம் அதிகம் பொருத்தமுள்ளவை என்று தன் கூற்ருகவும் பிற ஆராய்ச்சியாளர் கூற்ருகவும் சைவசமய நூலாசிரியர்கள் கூற்ருகவும் காட்டிச் செல்வதாகும். அடிக்குறிப்புக்களில் சைவத் திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் பூரணமாய்ப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வோர் இடத்திலும் ஆசிரியர் கொடுத்திருக்கின்ற சிறந்த விளக்கங்கள் நமது சிந்தனைக்குரியன. சிறந்த தத்துவ நூலாசிரியர் பலருடைய ஆங்கில எழுத்துக்களை ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப்பது அவருடைய பரந்த நூல் புலமையைக் காட்டுகிறது.

சைவத்தில் இப்படி ஒரு நூல் வந்திருப்பது மிகவும் சிறப்பு. முந்தைய நூல்கள் இதே வரிசையில் வெளிவந்திருப்பவை சில பாடம் சொல்லுவது போன்றவை. சில வெறும் சரடுகள். அப்படியின்றி இந்த நூல் ஆழ்ந்து சிந்தித்துப் பல பொருள்களையும் கருத்துக்களையும் தொகுத்து அழகுபடக் கோத்தது. சமாஜத்தின் தலைவராயிருந்த ஒரு பெரியார் இதை எழுதியிருப்பது நமக்கெல்லாம் பெருமை தருகிறது. இந்நூலை அண்ணமலை சர்வகலாசாலைக்கு எழுதி எல்லோரும் விலைக்குப் பெற்றுப் பயின்று தங்கள்

சமய அறிவைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும் என்று நாம் பரிந்துரை செய்கிறோம். ஆசிரியரிடமிருந்து இதுபோன்ற பின்னும் பல நூல்களை சைவ உலகம் எதிர்பார்க்கிறது. சைவத்தில் சமய அறிவு விளக்கம் தரும் நூல்கள் ஆங்கில மொழியில் மிகவும் குறைவு. உள்ள நூல்கள் வரிசையில் இந்நூலுக்கு மிகவும் சிறப்பான இடமுண்டு.

—மூ. அ.

கடவுளால் முடியாத செயல்கள் என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இந்நூலை ஆக்கியோர் மலேயா சித்தாந்த வித்தகர் திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் ஆவர். கோவை மாவட்டம் புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றத்தினரால் இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது. இந்நூலில் ஆசிரியரால் எழுதப்பெற்ற ஏழு கட்டுரைகளும் சில வினாக்களுக்குரிய விடைகளும் அடங்கியுள்ளன.

யாவரும் தத்தம் சமய அறிவு பெற வேண்டுவது இன்றியமையாதது. ஆனால் அவ்வறிவு ஐயந்திரி பறப் பெற்றுள்ளோர் எண்ணிக்கை மிகக் குறைவு. சிலர் தமக்கு ஐயங்கள் நிறைய இருந்தும் அவற்றை நீக்கச் சிறிதும் முற்படாது வாணாளை வீணே கழித்துச் செல்கின்றனர். சிலர் தம் சமயக் கொள்கைகளில் திரிபுணர்ச்சி மிக்காராய் ஒன்றை ஒன்றாக நினைத்து அமைதி பெற்றுக் காலங் கழிக்கின்றனர். இவ்வாறுள்ள சமய சம்பந்தமாக ஏற்படும அறிவுக் குழப்பங்களை ஒழுங்குபடுத்தத் தக்க நிலையில் நம் சைவ சித்தாந்த அறிவு விளக்கம் தரத்தக்க நூலகளுள் இந்நூல் தலையாய இடத்தைப் பெறும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. இந்நூலாசிரியர் மக்களுக்கு ஏற்படும் ஐயங்களை மனத்துட்கொண்டு அவற்றினை விளக்கிக் கூறிச்செல்லும் திறம் மிகவும் போற்றத்தக்கது. கடவுளால் முடியாத செயல்களும் உண்டா? என்றே இந்நூலைப் பார்த்ததும் ஒரு வியப்புத்தோன்றுவதியற்கை. இறைவனின் பெருமையைக் கூறும் பல முறைகளுள் எதிர்மறைமுகத்தான் வலியுறுத்துவதும் ஒரு முறையாகும். அம்முறையை யொட்டியே இந்நூலின் முதற் கட்டுரையையே ஆசிரியர் இந்நூலுக்குரிய பெயராயமைத்துள்ளார்.

இக்கட்டுரையைப் போன்றே பிற கட்டுரைகளும் சைவ சித்தாந்த நுட்பக் கருத்துக்களைத் தெரிவிக்க வல்லதாயுள்ளன. அறிவுத் தாகமுடையோர்க்கு இது பெரு விருந்தாயமைதல் ஒருதலை. ஆகவே மக்கள் யாவரும் இந்நூலை வாங்கிப் படித்து நம் சமய உண்மைகளின் தெளிவினைப் பெற்று மேலோங்குவார்களாக.

இது கிரௌன் அளவில் 16+160 பக்கங்கள் கொண்டது. நல்ல அச்சுடன் கூடியது. விலை ரூ. 2-00. அஞ்சற் செலவு வேறு. இந்நூல் கிடைக்குமிடம் :- செயலாளர், மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப் புளியம்பட்டி, கோவை மாவட்டம். உடனே பிரதிகளுக்கு முந்திக்கொள்க.

(அம்பை)

தொண்டைநாட்டுப் பாடல் பெற்ற சிவதலங்கள் என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம் இதனை எழுதியவர் பேராசிரியர் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் எம்.ஏ., பி. ஓ. எல். அவர்கள் ஆவர்.

தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவதலங்கள் 32 ஆகும். அவைகளைப் பற்றிய நூல்கள் ஏற்கனவே சில வெளிவந்துள்ளன. அவற்றைக் காட்டிலும் இந்நூலில் அவ்வத் திருக்கோயிலைப் பற்றிய வரலாற்றுக் கல்வெட்டுக் குறிப்பு நால்வர் பாடல்களை அடியொற்றி அவ்வத்தல இயற்கையமுகு, பிற சிறப்புச் செய்திகள் உளவேல் அவைகளையும் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். ஆசிரியர் சிறந்த சைவப்பற்றுள்ளாராதலின் அவ்வத்தலங்களுக்கு மக்கள் சென்று அவசியம் வழிபட வேண்டும் என்று ஆர்வம் கொள்ளும் வகையில இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. பாடல் பெற்ற தலங்களுக்கு அண்மையில் பிற தலங்களிருக்கினும் அவை பற்றிய குறிப்புக்களையும் இந்நூலில் காண இயலும். கிரௌன் அளவில் 8+320 பக்கங்கள் கொண்டது இந்நூல். நல்ல அச்சுடன் கூடியது. விலை ரூ 5-00 ஆகும். அவசியம் யாவரும் வாங்கிப் படித்தின்புறக்கூடியது.

வேண்டுவோர்:-பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. என்னும் முகவரிக்கு எழுதி நூலைப் பெற்றுக் கொள்ளலாம்.

(அம்பை)

பிறசெய்திகள்

புரசைத் திருநெறிக் கழக 102 ஆம் திங்கள் வழிபாடு 17-8-69 மாலையில் திருவல்லிக்கேணி சுந்தரமூர்த்தி விநாயகர் திருக்கோயிலிலும் எல்லம்மன் கோயிலிலும் பார்த்தசாரதி கோயிலிலும் சிறப்புற நிகழ்ந்தது.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் 27-7-69ல் பட்டினத்தடிகள் திருநாளும் 3-8-69, 10-8-69 ஆம் நாள்களில் காஞ்சிச் சிவதல வார வழிபாடும் சிறப்புறக் கொண்டாடப்பெற்றன. பல சைவான்றோர்கள் சொற்பொழிவாற்றினர்.

நம் சைவத் திருமுறைகள் 12ல் முதலெட்டுத் திருமுறைகட்கு ஒளிநெறி எழுதியவரும் முருகவேள் பன்னிரு திருமுறையைத் தொகுத்து அடைவு செய்தவருமாகிய தணிகைமணி இராவ்பகதூர் வ. சு செங்கல்வாராய பிள்ளை எம். ஏ. அவர்கள் தம் 87ஆம் அகவையில் 1-9-69 திங்களன்று மதுரைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த பட்டம் அளிப்பு விழாவில் டாக்டர் பட்டம் பெற்றமை குறித்து நம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அப்பெரியார் இன்னும் ஒரு நூற்றாண்டிருந்து தம் அருமைப் பணிகளை நம் சமயத்திற்கு ஆற்ற எல்லாம் வல்ல முருகன் அருள் சுரப்பானாக.

நம் சமாஜப் பேரன்பரும் நாசன் ஸ்டுடியோ பங்குதாரருமாகிய திரு. மா. ரா. சம்பந்த நாயகர் அவர்கள் திருமகளார் திருநிறை செல்வி ஜகதீஸ்வரிக்கும் திரு. T. J. மாதவ நாயகர் திருமகனார் திருநிறைசெல்வர் T. M. சுந்தரராமனுக்கும் திருமணம் 29—8—69 வெள்ளி காலையில் லாயிட்ஸ் ரோடிலுள்ள நல்வாழ்வு திருமண மண்டபத்தில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது.

புதுமணம் பெற்ற தம்பதிகள் எல்லா நற்செல்வங்களும் இனிது பெற்று நீடுவாழ பன்னிருகை வள்ளல் அருள் சுரக்குமாறு அவன் பதாம்புயங்களையே வணங்கி வாழ்த்துகின்றோம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madrds by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Publishea by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.